24.01.2025 HMOP NO. 223/2023

சாட்சி : PW 1 வள்ளியம்மை என்ற பிரியதர்ஷினி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

1. எனது கணவருக்கு பூர்வீகம் அமராவதி புதூர் என்றால் சரிதான். அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எனது பெற்றோர் மற்றும் குடும்பத்தார் தான் என் கணவர் வீட்டாரிடம் திருமணத்திற்க்கான பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் இல்லை. எனது பாட்டி பொன்னி ஸ்ரீ பால கணபதி நகரத்தார் திருமண தகவல் மையம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நகரத்தார் சமூகத்தினர் வழக்கப்படி திருமணத்தில் நடைபெறும் பேச்சு வார்த்தைக் குறித்து ஒரு நோட்டில் எழுதுவது வழக்கம் என்றால் சரிதான், ஆனால் நாங்கள் எழுதவில்லை.

2. அது போல எழுதப்படும் நோட்டில் மணமகன் வீட்டில் போடும் நகைகள் விவரம் மணமகள் வீட்டில் போடப்படும் நகைகள் விவரம் மற்றும் சீர்வரிசை விவரம் குறிப்பீட்டு எழுதப்படுவது வழக்கம் என்றால் சரிதான். அதே போல ஒவ்வொரு திருமண வீட்டிலும் அவ்வாறு எழுதுவார்கள் என்றால் சரிதான். அதே போல நகரத்தார் சமூகத்தை சேர்ந்தவர்கள் வரதட்சனை வாங்கமாட்டோம் என்று நோட்டில எழுதி கொடுப்பது வழக்கம் என்றால் அவ்வாறு வழக்கம் இல்லை. எங்களுடைய சமூகத்தை சேர்ந்த அனைவரும் அவ்வாறு நோட்டில் எழுதும் வழக்கம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பெண் கொடுக்க சம்மதம் என்றும் மட்டும் நோட்டில் எழுதுவது வழக்கம்.

3. அதே போல மணமகன் வீட்டார் அவர்களது தகுதிக்கேற்றார் போல் மணமகளுக்கு நகை கொடுப்பது நகரத்தார் சமூதாயத்தில் வழக்கம் என்றால் சரிதான், ஆனால் எங்கள் திருமணத்தில் தாலி செயின் மட்டும் போட்டார்கள். அந்த தாலி செயின் எத்தனை சவரன் என்றால் 4 பவுன் ஆகும். மணமகன் சார்பாக 6 பவன் செயின் போட்டார்கள் என்றும் நான் வழக்கிற்க்காக 4 பவுன் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல எனக்கு சரியாக எத்தனை பவுன் போட்டார்கள் என்று குறிப்பிட்டு தெரியாது அவர்கள் 6 பவுன் என்று சொன்னார்கள் அதை அளந்து பார்க்கும் போது 4 பவுன் தான் இருந்தது. அந்த 6 பவுன் நகை என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. முதல் முதலில் என்னை பெண் கேட்டு வரும் போது யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் எனது அம்மா, அப்பா மற்றும் அப்பத்தா மாப்பிள்ளை வீட்டிலிருந்து

மணமகனின் பெற்றோர் சகோதரி மற்றும் அவரது கணவர் இருந்தனர். திருமண பேச்சுவார்த்தை சமயத்தில் கோயில் விசேசம் நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். கோயில் விசேசம் சமயங்களில் தான் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து அவர்கள் பூர்வீக வீட்டிற்கு வருவார்கள் என்றால் சரிதான். திருமண பேச்சு வார்த்தை நடந்து 3 நாட்களிலேயே திருமணம் வைத்துக்கொள்ளலாம் என்று எங்கள் வீட்டில் சொன்னார்கள் என்றால் இல்லை. திருமண பேச்சுவார்த்தை நடைபெற்று எத்தனை மாதங்களில் திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 1-1/2 மாத காலத்தில் நடைபெற்றது. இந்த 1-1/2 மாத கால இடைவெளியில் எங்கள் வீட்டில் என்ன வேலை செய்கிறார்கள் என்பதும் மணமகன் வீட்டு தரப்பின் என்ன என்ன வேலை செய்கிறார்கள் என்றும் தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான்.

5. எங்கள் பாட்டி பொன்னி எதிர்மனுதாரர் வெளியூரைச் சோந்தவர் என்பதால் அவரது குடும்ப விவரங்களை விசாரித்தாரா என்றால் இல்லை. எனது பாட்டி பொன்னி தற்போதும் திருமண தரகர் வேலை செய்கிறார் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 1 திருமண பத்திரிக்கையில் எந்த அச்சகத்தில் பத்திரிக்கை அச்சிடப்பட்டது என்ற விவரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த 15.09.2023 தேதிக்கு முன்பு எத்தனை வருடங்கள் நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சுமார் 6 மாதங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

6. நான் சொல்வது போல 6 மாதம் பிரிந்து வாழ்ந்த காலத்தில் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் விவாகரத்து மற்றும் சேர்ந்து வாழக் கோரியோ அனுப்பி வைத்தேனா என்றால் விவாகரத்து கோரி அனுப்பி வைத்தேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், ரசீது அல்லது அஞ்சல ஒப்புதல் அட்டை ஏதேனும் இந்த வழக்கில தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தால் அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

7. தற்சமயம் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் கேட்டு தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞர் அறிவிப்பானது தற்போது எனக்கு வழக்கு தாக்கல செய்துள்ள வழக்கறிஞர் மூலமாகத்தான் அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதன் மூலம் அனுப்பினேன் என்றால் தபால மூலமாக அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் பிரிந்து வந்த பின்னா காவல் துறையில ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் 18.09.2021ல் கோவை டி.ஜே மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ச் ஆகி அமாராவதி

புதுாருக்கு வந்து விட்டேன் என்றால் சரிதான். நான் டி.ஜே மருத்துவமனையிலிருந்து கருத்து வேறுபாடு காரணமாகத்தான் பிரிந்து வந்தேன் என்றால் சரிதான். என்னை அமராவதி புதுாருக்கு எனது பெற்றோர்கள் தான் அழைத்துவந்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் எனது கணவர் என்னை சமதானம் படுத்தி அழைத்துசென்றார் என்றால் சரிதான். நான் இங்கிருந்து போய் தான் ஆலங்கொம்பு பகுதியில் மெடிக்கல் வைத்து தொழில் செய்து வந்தேன் என்றால் சரிதான். ஆலங்கொம்பு பகுதிக்கு தனிக்குடித்தனம் போனது எப்போது என்றால் நான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ச் ஆகி வந்து 6 மாதங்களுக்கு பின்பு 2022 வருடம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் தனிக்குடித்தனம் சென்றேன். ஆலங்கொம்பு பகுதியில் மருந்தகம் வைத்து எத்தனை மாதம் அங்கு தொழில் செய்து வந்தேன் என்றால் சுமார் 5 மாதம் தொழில் செய்து வந்தேன்.

8. நான் பிரிந்து வந்த பின்னர், மனு தாக்கல் செய்வதற்கு 6 மாதங்கள் முன்பு வரையில் எனது கணவர் எத்தனை முறை என்னிடம் வந்து சேர்ந்து வாழச் சொல்லி அழைத்தார் என்றால் அவர் என்னை அழைக்கவில்லை இந்த மனு தாக்கல் செய்து 10 நாள்களுக்கு பின்பு தான் குடும்பத்துடன் வந்து சேர்ந்து வாழச் சொல்லி கேட்டார்கள். இந்த வழக்கு அழைப்பாணை பெறுவதற்கு முன்பாகவே எங்கள் சமூதாயத்தில் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழச் சொல்லி மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் மனு கொடுத்த விவரம் நான் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் அவர்கள் குடும்பத்துடன் வந்து சேர்ந்து வாழச்சொல்லி கேட்ட போதுதான் மனு கொடுத்ததாக சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும்.

9. இந்த வழக்கில் ஆஜர் ஆவதற்கு முன்பே எங்களது சமூதாயத்தினர் முன்பு கோவிலில் வைத்து ஒரு பஞ்சாய்த்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் இரு தரப்பிலும் சேர்ந்து 20 பேர்கள் கலந்து கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். இந்த பஞ்சாயத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அந்த பஞ்சாயத்தில் தலைமை வகித்தவர் சீனிவாசன் என்றும் அவர் தற்போது எங்கள் நகரத்தார் சமூதாய தலைவராக பதவியில் உள்ளார் என்றால் சரிதான். அந்த பஞ்சாய்த்தில் கலந்து கொண்ட அனைவரும் என் கணவருடன் சேர்ந்து வாழச் சொல்லி தான் என்னை அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். அதற்கு நான் என்ன பதில் அளித்தேன் என்றால் எனது கணவர் மற்றும் குடும்பத்தார் அனைவரும் ஒவ்வொரு விதமாக சித்தரவதை செய்கிறார்கள் என்றும், இரவு 11 மணியளவில் வந்தாலும் படுக்கையறையில் தனிமையில் நடந்த விவரங்களை தனது பெற்றோருக்கு தெரிவித்துவிட்டும், திருமணம் செய்ததே குழந்தைக்காகத்தான் என்றும் குழந்தை பிறந்துவிட்டால் பிரித்து விடலாம் என்றும் கோரி

தினமும் தொல்லை செய்ததாலும் தனிக்குடித்தனம் செல்ல சிறு சிறு பொருள்கள் வீட்டிலிருந்து தான் எடுத்து வரவேண்டும் என்று கூறியதால் தான் நான் மருந்து சாப்பிட்டு டி.ஜே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன் என்று கூறினேன் நான் மேலே சொன்ன விவரங்களை பஞ்சாயத்தில் கலந்து கொண்ட நபர்களை விசாரித்தால் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். டி.ஜே மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது காவல் நிலையத்தில் இருந்து என்னை விசாரிக்க வந்தார்களா என்றால் வந்தார்கள். விசாரிக்க வந்த போது நான் கொடுத்த வாக்குமூலத்தை வீடியோவில் பதிவு செய்து கொண்டார்கள் என்றும், நான் சொன்ன வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த வீடியோ மற்றும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் வரவழைத்து தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை, அந்த வீடியோ பதிவு செய்யும் போது எதிர்மனுதாரர் வீட்டில் உள்ளவர்கள் நடந்த விவரங்களை சொன்னால் வரதட்சனை கொடுமை என்று வழக்கு பதிவு செய்து அனைவரையும் உள்ளே அனுப்பிவிடுவார்கள் என்றும் எனவே இனிமேல எந்த கொடுமையும் செய்யமாட்டோம் என்று கூறி வாக்குமூலத்தை என்னை மாற்றி சொல்லச் சொன்னதன் அடிப்படையில் நான் மாற்றி கூறினேன், அந்த பதிவில் எதிர்மனுதாரர் குடும்பத்தாரும் உள்ளனர்.

10. பஞ்சாயத்தில் நடந்த பேச்சு வார்த்தையில், நான் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி விட்டோம் என்று சொன்னால் சரிதான், அங்கு சுமார் 1-1/2 மணி நேரம் பேச்சுவார்த்தையில் ஒருதலைப்பட்சமாக பேசியதால் நீதிமன்றத்தில் சென்று பார்துக்கொள்வோம் என்று சொன்னோம். நான் பிரிந்து வந்த பின்பு முதலில் எந்த நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் சென்னையில் Kashiv Infotech private ltd பூந்தமல்லி. தற்போது அங்குதான் பணிபுரிகிறேன் என்றால் இல்லை, ஆயிரம் விளக்கு பகுதியில் மெட்ராஸ் செக்கியுரிட்டி பிரிண்டர்ஸ் பிவேட் லிமிடட்-ல் வேலை செய்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்த விவரத்தை எனது கணவர் வசம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. நான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் விவரம் எங்கள் சமூகத்தில் பஞ்சாயத்து நடைபெற்ற போதுதான் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் விவரம் தெரிந்த பின்பு எதிர்மனுதாரர் நான் வேலை பார்க்கும் இடத்தில் அருகிலேயே வேலை அமைத்து அங்கு வந்து தங்கி கொள்வதாக சொன்னார் என்றால் பஞ்சாயத்தின் போது எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தங்கி வீட்டு வேலை அனைத்தும் பார்த்துக்கொள்வார் என்றும் நான் சம்பாதித்து கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். பஞ்சாயத்து பேசிய நபர்கள் அவ்வாறு சொன்னார்கள்

என்றால் சரிதான். பஞ்சாயத்து நடைபெற்றபோது அனைவரும் முன்னிலையிலும் எதிர்மனுதாரர் எந்த நிபந்தனையாக இருந்தாலும் நான் ஏற்றுக்கொண்டு என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு தவிர ஜீவனாம்சம் கோரி வேறு எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.